# ரந்தாவ் தமிழ்ப்பள்ளி

## தமிழ் வாழ்த்து

<u>கோடிட்ட இடத்தைப் பூர்த்திச் செய்க.</u>

காப்பியனை ஈன்றவளே!
காப்பியங்கள் கண்டவளே!
கலைவளர்த்த தமிழகத்தின்
________________________
தாய்ப்புலமை யாற்புவியில்
தனிப்பெருமை கொண்டவளே!
________________________
தரணியெங்கும் வாழ்பவளே!

எங்களெழில் மலைசியத்தில்
சிங்கைதனில் ஈழமண்ணில்
________________________
இனக்காவல் தருபவளே!
பொங்கிவளர் அறிவியலின்
________________________
பொருந்தியின்று மின்னுலகில்
________________________

________________________
செழித்திருந்த பொற்காலம்
சேர்த்துவைத்த செயுள்வளத்தில்
________________________
அவ்வியலில் வேருன்றி
அறிவுயர்ந்த தற்காலம்
________________________
ஆளுகின்ற புதியவளே!

________________________
நிலவரம்பின் தடைகடந்து
கோமகளாய்த் தமிழர்மனம்
கொலுவிருக்கும் தமிழணங்கே!
________________________
நினதாட்சி தொடருமம்மா!
நிறைகுறையாச் செம்மொழியே
நிலைபெறநீ வாழியவே!

- புத்தாக்கம் அத்தனைக்கும்
- செம்மாந்த பழையவளே!
- அழகழகாய் உரைநடையும்
- குலங்கடந்து நெறிகடந்து
- நிலவினுக்கே பெயர்ந்தாலும்
- தலைநிலத்தில் ஆள்பவளே!
- இலக்கியமாய் வழக்கியலாய்
- புரட்சிவலம் வருபவளே!
- தமிழரொடு புலம்பெயர்ந்து
- செவ்வியலின் இலக்கியங்கள்

LIVEWORKSHEETS